# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## O.S. No.126 /2021

## 27.02.2026

## P.W.1-பேச்சியம்மாள்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சொத்தில் 1/2 பாகம் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் யார் மேல் வழக்கு தொடந்துள்ளேன் என்றால் பாண்டி, தினேஷ்குமார், மூக்கன் ஆகியோர்கள் மீது வழக்கு தொடந்துள்ளேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தான் தயார் செய்தார். அதில் உள்ள விவரம் தெரியும். நான் 16 அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 16 அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணம், சர்வே எண்கள் பற்றி தெரியாது. எனது பெற்றோர்கள் இறந்துவிட்டனர். எனது பெற்றோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் ஒச்சாத்தேவர். எனது தாத்தாவின் பெயரை பிராதில் பொன்னாங்கன் என கூறிவிட்டு நிரூபண வாக்குமூலத்தில் ஒச்சாத்தேவர் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா பெயரில் தாவா சொத்திற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.02.27 17:47:26 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.